**ஜூலை - 18**

**"கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும்… துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும்,… தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும் இருப்பார்கள்." - 2தீமோ 3 : 1, 2, 4**

உண்மையுள்ள கிறிஸ்தவன் "துணிகரமுள்ளவனாக" இருக்கிறதில்லை. அதற்கு மாறாக, கர்த்தருக்குச் செய்திருக்கிற அவனுடைய பிரதிஷ்டை உவமையாய் அவனைச் சிரச்சேதம் பண்ணிவிட்டது. அவன் தனது தலையை இழந்தான். தன்னுடைய சொந்தச் சித்தத்தையும் சுய ஆட்சியையும் விட்டுவிட்டான். யேசு கிறிஸ்துவின் சீஷனாக, தலையான யேசுவின் நிபந்தனையற்ற அழுகைக்குத் தன்னையே ஒப்புக்கொடுத்தான். ஆகையால், உண்மையுள்ள கிறிஸ்தவன், ஜீவியத்தின் எல்லாக் காரியங்களிலும் தன்னுடைய சந்தோஷங்கள் சம்பந்தமாகவும், பாரம், சோதனைகள் சம்பந்தமாகவும் வழிகாட்டப்படுவதற்காக எப்படி என்றும், என்ன செய்ய வேண்டும் அல்லது சொல்ல வேண்டும் என்று அறிவதற்காக – ஆம் தன்னுடைய மனதின் எண்ணங்களை கிறிஸ்துவில் தேவனுடைய சித்தத்துக்கு பூரணமான இணக்கத்தை உடையதாயிருப்பதற்காகத் தனது தலைக்கு முறையிடுகின்றான். **- Z ’99, 102 (R 2459)**

நாம் கடைசி நாட்களில் இருக்கிறோம். அப்போஸ்தலனுடைய விளக்கத்திற்குச் சரியாக, கொடிய காலங்கள் நம்முடையவை. "மனுஷர்கள்" என்று இங்கே விபரிக்கப்பட்டிருக்கிறவர்கள் முன்னடையாளமான யந்நே, யம்பிரே வகுப்புக்களைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களுடைய கர்த்தருக்கும் முந்திய சகோதரர்களுக்கும் எதிராக உண்மையாகவே நம்பிக்கைத் துரோகம் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். பழைய யூதாஸைப்போல அவர்கள் இவர்களை லாபத்திற்காக விற்கிறார்கள். தங்களுடைய பிடிவாதத்தில், அவர்கள் உண்மையாகவே துணிகரமுள்ளவர்களாயிருக்கிறார்கள். தேவனுக்குள்ள அன்பிலிருந்து பாய்ந்தோடும் சுயவெறுப்பின் ஜீவியம், அவர்களைக் கவரமுடியவில்லை. தன்னயத்திற்கும், உலகத்தனத்திற்கும் அவர்கள் இடங்கொடுத்ததின் காரணமாக, சுயவெறுப்பின் ஜீவியம் செத்ததாயிருக்கிறது. **- P ’35, 102.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**1தீமோ 4:1,2; 2பேது 2:1-3; 10-22; 3:3; 1யோவா 2:18,19; 2யோவா 7,10,11, 3யோவா 9-11; யூதா 3,4,8-19; எபி 6:4-6; 10:26-29; 1யோவா 5:16.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 70 (R 5413)**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தில் அறிந்தது என்ன? அவை என்னில் என்ன கிரியை செய்தது?**